முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 9/2021

வாதி தரப்பு சாட்சி.1 ரவிச்சந்திரன் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 06.11.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரவிச்சந்திரன் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | சிவகுரு | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 50 |

## குறுக்கு விசாரணை

1) 1ம் பிரதிவாதி நில அபகரிப்பு பிரிவில் என் மீது புகார் கொடுத்து என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அதன் பின்னிட்டுதான் இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எனது சித்தப்பா மகன். 2ம் பிரதிவாதியின் வீட்டில் தான் 1ம் பிரதிவாதி வசிக்கிறார் என்றால் தற்போது வசிக்கிறார். எத்தனை வருடமாக இருக்கிறார் என்றால் 7, 8 வருடமாக வசிக்கிறார். எங்கள் வீட்டிற்கும் கீழ்புறத்தில் சதீஷ்குமார் வீடு என்றால் சரிதான். தாவா ஏ அயிட்ட சொத்திற்கு மேற்குபுறத்தில் வீதி உள்ளது என்றால் சரிதான். தாவா ஏ அயிட்ட சொத்திற்கு பட்டா தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா பி அயிட்ட சொத்திற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்

2) 1ம் பிரதிவாதி சத்துணவு சமையல் செய்பவராக பணியாற்றுகிறார் என்றால் தற்போது ஓய்வு பெற்றுவிட்டார். தாவா சொத்திற்கு விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். தாவா ஏ மற்றும் பி அயிட்ட சொத்திற்கு ஒரே நான்கெல்லை காட்டியுள்ளேனா என்றால் ஆமாம். தாவா பி அயிட்ட சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி எனக்கு ஆவணம் எதுவும் பதிவு செய்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீதுகள் தாவா ஏ அயிட்ட சொத்திற்கு உரியவை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி என்னுடன் 30 வருடங்கள்

வசித்ததாக சொல்லும் நிலையில் பி அயிட்ட சொத்தை பொறுத்து பதிவு செய்த ஆவணங்கள் பெற நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

3) 1ம் பிரதிவாதி எனக்கு அத்தை உறவு என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயரில் அவர் அனுபவம் செய்துள்ள சொத்திற்கு பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். பி அயிட்ட சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி என்னுடன் வசித்த காலத்தில் அவருடைய உடமைகளை நான் எடுத்துக்கொண்டு தற்போது இவ்வழக்கில் அதை வா.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா-ஆ.4 ல் நான்கெல்லைகள் குறித்து சொத்துவிபரம் எழுதப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் கண்டுள்ள சாட்சிகளின் விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.1ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட வருவாய் இருந்ததால் அவர் என்னை சார்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல.

வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**